அதுபோன்ற உடற்பயிற்சிக் கூடங்களை அமைத்தார்கள். இப்பொழுது இன்னும் நவீனமயமாகத் தேவைப்படுகின்ற நேர்வில் அதனையும் எதிர்காலத்தில் நிறைவேற்றித் தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 246, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

246—

வாசனை திரவியத் தொழிற்சாலை

***3129—திரு. வி.வி. ராஜன் செல்லப்பா:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, வளையங்குளத்தில் வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதி, வளையங்குளம் பகுதியில் நறுமணத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் தொகுதி, வளையங்குளம் பகுதியைச் சுற்றியுள்ள சுமார் 15 கிராமங்களில் அதிகமாக மலர் விவசாயம் நடைபெற்று வருகிறது. குறிப்பாக பெரும்பிடுகு முத்தரையரை வணங்கக்கூடிய மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மலர் விவசாயிகள் அதிகம் வசிக்கக்கூடிய பகுதி. மல்லிகை

2022 மே 9]

மற்றும் ஏனைய மலர்களை உற்பத்தி செய்கிறார்கள். வெளி மாவட்டங்களுக்கு, வெளி மாநிலங்களுக்கு, வெளி நாட்டிற்கு விமானம்மூலம்கூட மலர்களை அனுப்பக்கூடிய வாய்ப்பு அந்த மலர் விவசாயிகளுக்கு இருக்கிறது. தனியார் ஆலைகள் கூடுதலாக இலாபத்துடன் செயல்படுகின்ற காரணத்தினால், வளையங்குளம் பகுதியில் இருக்கின்ற விவசாயிகள் பயன்பெறுகின்ற வகையிலே, கண்டிப்பாக அரசின் சார்பாக ஒரு வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அரசும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

*அதோடு மட்டுமல்ல, இந்திய அளவிலும், தமிழக அளவிலும், உணவு பதனீட்டுத் தொழில் (*Food Processing Industries*) அத்தியாவசியத் தொழிலாக மாறி வருவதை அனைவரும் உணர்வோம். திருப்பரங்குன்றம் தொகுதியிலுள்ள அவனியாபுரம், வெள்ளைக்கல் பகுதிகளில், மதுரை கீழமாசி வீதி உணவுப் பொருள் வியாபாரிகளும், உணவு பதனீட்டுத் தொழிற்சாலை நடத்துகிறவர்களும் அரசு சார்பில் உணவு பூங்கா (*Food Park*) அமைக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகவே,* TIDCO *மூலமும், வேளாண்மைத் துறையின் மூலமும் திருப்பரங்குன்றம் தொகுதியில் உணவு பூங்கா ஒன்றை உருவாக்க வேண்டுமென்று விரும்புகிறோம். அந்த மக்களுக்காக உணவு பூங்கா ஒன்றை திருப்பரங்குன்றம் தொகுதியில் உருவாக்கித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டத்தில் மல்லிகைப் பூக்கள், 1,612.68 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகிறது. இதிலிருந்து சுமார் 16,718 மெட்ரிக் டன் மல்லிகைப் பூக்கள் சாகுபடி செய்யப்படுகிறது. சாகுபடி செய்யப்படும் மல்லிகை பூக்களுக்கு சில்லறை விற்பனையில் நல்ல விலை கிடைப்பதால், விவசாயிகள் பூ மண்டிகளிலேயே மல்லிகை பூக்களை விற்பனை செய்து வருகிறார்கள். மதுரை மாவட்டத்தில்*

விளையும் மல்லிகைப் பூவினை மூலப் பொருளாகக் கொண்டு, வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் 3 தனியார் தொழிற்சாலைகள் உள்ளன. குறிப்பிட்ட பருவ காலத்தில் மட்டும் கிடைக்கும் அதிக அளவிலான மல்லிகைப் பூக்களைக் கொண்டே, இந்த வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. மல்லிகைப் பூக்கள் வருடம் முழுவதும் கிடைக்காத காரணத்தினால், இந்தத் தொழிற்சாலைகள் இயக்குவதற்கே மூலப் பொருளான மல்லிகைப் பூ பற்றாக்குறையாக உள்ளது. எனவே, திருப்பரங்குன்றம் தொகுதியில் நறுமணத் திரவியங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை. தமிழக அரசின் மூலமாக, பல்வேறு தொழில் தொடங்குவதற்கு, பல்வேறு கடன் வழங்குகின்ற திட்டங்கள் இருக்கின்றன. தொழில் தொடங்குபவர்கள் யாரேனும் முன்வருகிறபட்சத்தில் அவர்களுக்கு ஆலோசனை வழங்கி, கடன் உதவி அளித்து, தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் இந்த அரசு செய்து தரும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அளித்திருக்கிற வாய்ப்பை தொகுதி வளர்ச்சிக்காக சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். இரண்டாவது கேள்வியும் முதல் கேள்வியின் தொடர்ச்சியாகக் கேட்கிறேன். Food Processing Industries— உணவு பூங்கா (Food Park) ஒன்றை அந்தத் தொகுதியில் கொண்டு வரவேண்டுமென்ற வாய்ப்பை வேளாண்மைத் துறையுடன் இணைந்துதான் செய்ய முடியும். TIDCO, வேளாண்மைத் துறை இரண்டும் சேர்ந்துதான் அந்தப் பணியினைச் செய்ய முடியும். ஆகவே, அதனையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதியில், ஏழையெளியோர் அதிக அளவில் இருக்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் வாடகைக் கட்டடத்தில் வசிக்கிறார்கள். அவர்களுக்கான மாற்று வீடுகள் கட்டப்பட்டால்—கூடுதலான தூரத்திலே கட்டப்பட்டு, அங்கேயிருக்கிற நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்

2022 மே 9]

மாற்று இடத்திலே தங்குவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே, திருப்பரங்குன்றத்தில் இருக்கின்ற ஏழையெளியோருக்கும், வாடகைக் கட்டடத்தில் இருக்கும் ஏனையோருக்கும் எங்களுடைய திருப்பரங்குன்றம் தொகுதிக்குள்ளாக நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம்—ஏனென்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையையும் சார்ந்தவர் என்பதால் இதனையும் கேட்டுக்கொள்கிறேன்—அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு, புதிய தொழில் தொடங்குபவர்களுக்கு மானியத்துடன்கூடிய சுய வேலைவாய்ப்பு கடன் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. திருப்பரங்குன்றம் தொகுதியைப் பொறுத்தமட்டில், இத்துறையின்மூலம் செயல்படுத்தப்படும் சுய வேலைவாய்ப்பு கடன் திட்டத்தின்கீழ் கடந்த நிதியாண்டில் மட்டும் 34 நிறுவனங்களுக்கு 1 கோடியே 36 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு, தொழில் தொடங்கப்பட்டுள்ளது. அதேபோல, முதலீட்டு மானியத் திட்டத்தின்கீழ், கடந்த நிதியாண்டில், 13 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ரூ.2 கோடியே 78 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு, தொழில்கள் நடைபெற்று வருகின்றன. நறுமணப் பூக்களைப் பயன்படுத்தி, வாசனைத் திரவியத் தொழிற்சாலைத் தொடங்க முன்வரும் தனியார் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்கெனவே நான் சொன்னதைப்போல, இந்த அரசு நிச்சயமாக உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, உணவு பதப்படுத்துகிற தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்துகொண்டு, நிச்சயமாக அதை உருவாக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று அரசு பரிசீலனை செய்யும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

அதேபோல், நகர்ப்புற அடுக்குமாடி வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். நகரப் பகுதிகளிலே, பேரூராட்சிகளிலே அரசு புறம்போக்கு இடங்களைத் தேர்வு செய்து தந்து, அங்கு பயனாளிகள் இருந்து, அந்தப் பயனாளிகள், தங்களின் பங்கை அரசிற்குச் செலுத்த முன்வரும்பட்சத்தில், நிச்சயமாக அந்த ஏழைகளுக்கு, அங்கு நம்முடைய அரசு வீடுகளைக் கட்டித் தரும் என்ற உத்தரவாதத்தைத் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 247, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

247—

புதைவடங்கள்

***9746—திரு. க. கணபதி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரவாயல் தொகுதியில் மேலே செல்லும் மின்கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரவாயல் தொகுதியில் உள்ள மின்கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கணபதி அவர்கள்.*